## சுருக்கம்

திட்டங்கள் – மாநில திட்டம் – சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் (2023–24) – திட்ட செயலாக்கம் – திட்ட நிதியை பயன்படுத்துதல் குறித்து உரிய வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டது – அரசாணையில் உரிய திருத்தம் மேற்கொள்ளுதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி(மா.அ.தி.1) துறை

அரசாணை (நிலை) எண்.149

நாள்: 20.12.2023
சோபகிருது, மார்கழி 4–ந் தேதி
திருவள்ளுவர் ஆண்டு – 2054

படிக்கப்பட்டவை :

(1) அரசாணை (நிலை) எண்.98, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி(மாஅதி–1) துறை, நாள் 19.07.2023.
(2) அரசாணை (நிலை) எண்.120, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி(மாஅதி–1) துறை, நாள் 29.09.2023.

மேலும் படிக்கப்பட்டவை :

(3) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடித எண்.16181/2023/ சி.டி.எஸ்–2, நாள் 29.09.2023.

------

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், 2023–24–ஆம் ஆண்டுக்கான சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தினை செயல்படுத்துவதற்காக ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கு ரூ.3 கோடி வீதம் ரூ.702 கோடிக்கு நிர்வாக அனுமதியும், அதில் 50 சதவீத தொகையான ரூ.351 கோடிக்கு நிதி விடுவிப்பும் செய்து விரிவான வழிகாட்டு நெறிமுறைகளுடன் ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில், 2023–24–ஆம் ஆண்டுக்கான சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தினை செயல்படுத்துவதற்காக மொத்த நிர்வாக அனுமதி ரூ.702 கோடியில், 50 சதவீதமான ரூ.351 கோடி முதல் தவணைத் தொகையாக விடுவிக்கப்பட்டது போக மீதமுள்ள இரண்டாவது மற்றும் இறுதி தவணைத் தொகை ரூ.351 கோடிக்கு நிதி விடுவிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அவர்கள் மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், பத்தி எண்.4.1–ல் கீழே பத்தி 4–ல் விவரிக்கப்பட்டுள்ளவாறு திருத்தங்கள் மேற்கொண்டு ஆணை வெளியிடுமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமான பரிசீலனைக்குப்பின், மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், பத்தி எண்.4.1–ற்கு பதிலாக கீழ்க்கண்டவாறு திருத்தங்கள் மேற்கொள்ளலாம் என தீர்மானித்து அரசு அவ்வாறே ஆணையிடுகிறது:–

<u>திருத்தம் தமிழில்</u>

<u>4.1. பணிகளை பரிந்துரைத்தல் / அனுமதித்தல்:</u>

ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் வழிகாட்டு நெறிமுறைகளின்படி 2023–24 ஆம் ஆண்டுக்கான மொத்த நிதி ஒதுக்கீட்டிற்கும் பணிகளை இணைப்பு 1–ல் காணும் படிவத்தில் உரிய மாவட்ட நிர்வாகத்திடம் பரிந்துரை செய்தல் வேண்டும். மேலும், சட்டமன்ற உறுப்பினர்கள், 2021–22 மற்றும் 2022–23 ஆம் நிதி ஆண்டுகளுக்கான சேமிப்பு நிதி மற்றும் வங்கி வட்டி ஆகியவற்றிலிருந்தும் பணிகளை சட்டமன்றப் பேரவைக் காலத்திற்குள் பரிந்துரை செய்யலாம்.

<u>AMENDMENT IN ENGLISH</u>

<u>4.1. Recommendation/ Sanction of the works:</u>

Each MLA should recommend works as per the Guidelines for the entire allocation for the financial year 2023-24 in the format at Annexure-I to the concerned District Authority. In addition, MLAs can also recommend works for the savings fund and interest accrued thereon of the financial year 2021-22 and 2022-23 within the tenure of the Legislative Assembly.

5. இந்த ஆணை நிதித் துறையின் இ–கோப்பு அ.சா.எண்.6054/நிதித் துறை/2023, நாள் 14.12.2023–ல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ப.செந்தில்குமார்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்

அனைத்து சட்டமன்ற உறுப்பினர்கள்
(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் வாயிலாக).
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை–15.

அரசு முதன்மைச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும்
குடிநீர் வழங்கல் துறை, சென்னை–9.
செயலாளர், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகம்,
சென்னை–9.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் (சென்னை நீங்கலாக)
(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் வாயிலாக).
அனைத்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர்கள்
(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் வாயிலாக).
ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை–3.
ஆணையர், பேரூராட்சிகள் இயக்குநரகம், சென்னை–108.
ஆணையர், கருவூலக் கணக்கு, சென்னை–35.
உறுப்பினர் / செயலர், மாநிலத் திட்ட ஆணையம், சென்னை–5.
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, சென்னை–108.
மாநில தலைமை கணக்காயர், சென்னை – 18/35.
சம்பளக் கணக்கு அலுவலர் (தலைமைச் செயலகம்), சென்னை–9.
சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை–35.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–8.
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை–1.
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
தேசிய தகவல் மையம், சென்னை–9.

<u>நகல்</u>

முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (ஊரக வளர்ச்சி) அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
தலைமைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை–9.
அரசு முதன்மைச் செயலாளர் அவர்களின் முதுநிலை
தனிச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை,
சென்னை–9.
நிதி (ஊ.வ / வரவு–செலவு–I / வரவு–செலவு– II / (ஊ.வ) துறை,
சென்னை– 9.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

மீனாட்சி/20-12-2023
பிரிவு அலுவலர்

20/12